# அகநானூற்றில் வினைவயிற்பிரிவு

**திருமதி.பா.நித்யா எம்.ஏ.,**
எம்.ஃ.பில்., தமிழ்த்துறை உதவிப்பேராசிரியை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர் - 626001.

அகநானூறு எட்டுத்தொகை எனப்படும். சங்க காலத் தமிழ் நூல் தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஒரு நூலாகும். இந்நூல் நானூறு பாடல்களின் தொகுப்பாக அமைந்துள்ளதால் அகநானூறு என வழங்கப்படுகிறது. இதற்கு “நெடுந்தொகை” என மற்றொரு பெயரும் உண்டு. இந்நூலில் களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை என மூன்று பெரும் பிரிவுகள் உள்ளன. பழந்தமிழர் வாழ்வியலின் இனிய நிகழ்வுகளையும், அன்பின் வெளிப்பாடுகளையும் காட்டும் இலக்கியம் சங்க இலக்கியமாகும். அவற்றுள் ஒன்றான அகநானூறு பழந்தமிழரின் மனவுணர்வை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. தலைவன், தலைவியைப் பொருள், போர், ஓதல் ஆகிய வினைகளின் பொருட்டு தலைவன் மேற்கொள்ளும் பிரிவுகள் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**பிரிவிற்கான வகைகள்:**
வினையின் காரணமாக ஓரிடத்திலிருந்த மற்றோர் இடத்திற்கு உற்றார், உறவினரைப் பிரிந்து செல்வது பிரிவு எனப்படும். இத்தகைய பிரிவுகள் பழந்தமிழ் இலக்கியமான சங்க இலக்கியங்களில் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. **ஓதற் பிரிவு**
2. **காவற் பிரிவு**
3. **தூதிற் பிரிவு**
4. **துணைவயிற் பிரிவு**
5. **பொருள்வயிற் பிரிவு**
6. **பரத்தையிற் பிரிவு**

இவை பெரும்பாலும் கற்புக் காலத்து நிகழும் பிரிவுகளாகும். ஆனால் பொருள்வயிற்பிரிவு மட்டும் களவு, கற்பு என இரண்டு நிலைகளிலும் நிகழ்வதாகும். அத்தகைய பொருள்வயிற் பிரிவு பற்றி வ.சுப. மாணிக்கனார் அவர்கள் “பொருள்வயிற் பிரிவு என்னும் இத்துறை சங்கப் புலவர்களின் நெஞ்சை அள்ளிய துறைகளுள் ஒன்று” என்று குறிப்பிடுகின்றார்.

**அகநானூற்றில் பிரிவுக் களங்கள்**
அகமாந்தர்களின் மனவுணர்வை வெளிப்படுத்தும் அகநூலான அகநானூற்றில் மூன்று வகையான பிரிவுகள் இடம் பெற்றுள்ளன. அவை,

1. **ஓதற் பிரிவு**
2. **போருக்கானப் பிரிவு**
3. **பொருள் வயிற் பிரிவு**

என்பனவாகும்.

**ஓதற்பிரிவு**
ஓதற்பிரிவு என்பது கல்விக்கான பிரிவு ஆகும். சங்ககாலத்தில் கல்வியானது கடவுள் தன்மை வாய்ந்ததாகக் கருதப் பெற்றுள்ளது. தலைவன் ஓதல் காரணமாகத் தலைவியை விட்டுப் பிரிந்து செல்கிறான் என்ற செய்தி அகநானூற்றில் இடம் பெற்றுள்ளது. இதனை,

**“கைதொரு மரபின் கடவுள் சான்ற**
**செய்வினை மருங்கின் சென்றோர் வல்வரின்”** **(அகம். 125)**

என்ற பாடலடிகள் வழி அறியலாம்.
நச்சினார்க்கினியர் ஓத்தென்பது வேதத்தைக் குறிப்பதால் அந்தணர், அரசர், வணிகர் மற்றும் உயர்ந்த வேளாளர் இவர்களுக்கு மட்டும் உரியது என்று குறிப்பிடுகின்றார். இதனை,

**"உயர்ந்தோர்க்குரிய ஓத்தினான"** **(தொல். 280)**

என்ற நூற்பா வழி அறியலாம்.

**போருக்கான பிரிவு**

போர் என்பது பண்டைய கால மக்களின் வீர உணர்வை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. மன்னனின் போர்த்தொழில் காரணமாகத் தலைவியைப் பிரியும் தலைவனின் புலம்பலானது இரண்டு நிலைகளில் அமைகின்றது. அவை,

1. **போர்த் தொழில் முடிந்தவிடத்துப் புலம்பல்**
2. **போர்த்தொழில் முடியாதவிடத்துப் புலம்பல்**

என்பனவாகும்.

தலைவன் வேந்தனின் போர்த் தொழில் காரணமாக தலைவியைப் பிரித்து சென்றான். அங்ஙனம் அவன் சென்றவிடத்து, போரானது விரைவில் முடிவுற்றது. போர் முடிந்த தலைவன், "வருவேன்" என்று கூறிச் சென்ற காலமும் பொய்த்தது. நமக்கு அவர் செய்யும் அருளும் மாறிவிட்டது எனத்தன் தோழியிடம் கூறி தலைவி வெறுத்து நிற்பாள் என்பதை,

**"வருதும் என்ற நாளும் பொய்த்தன**
**அரிஏர் உண்கண் நீரும் நில்லா**
**அருள்கண் மாறலோ மாறுக அந்தில்**
**அறன் அஞ்சலரே!"** **(அகம். 144)**

என்ற அடிகள் மூலம் தலைவி தன்னை அருளில்லாதவன் என்று எண்ணி விடுவாளேயெனத் தலைவன் புலம்பவதை உணர முடிகின்றது.

போர்த்தொழில் காரணமாகச் செல்லும் தலைவன் போர் முடிவுறாமையால் அங்கு பாசறையமைத்துத் தங்குகிறான். அப்பாசறையில் இருந்து தலைவன் தன் நிலையையும், தலைவியின் நிலையையும் குறித்துத் தன் நெஞ்சிடம் புலம்புகின்றான். தன்னை நினைத்துத் தலைவி வருந்துவதோடு நீர் சொரியும் கண்களுடன் வீட்டில் மகிழ்ச்சியின்றி வாழும் தலைவியை நினைத்து வருந்துகின்றான். மேலும், தலைவி தன்னைக் கண்டால் தன் பழைய அழகு நிலையைப் பெறுவாள்.

என்றும் நினைத்துப் புலம்புவதை,

**"இருபனி உறைக்கும் கண்ணொடு இனைபு, ஆங்கு**
**இன்னாது உறைவி தொல்நலம் பெறூஉம்**
**இதுநற் காலம்"** **(அகம். 164)**

என்ற பாடலடிகள் மூலம் தலைவன் புலம்புவதையும், தலைவி நலனில் கொண்ட அக்கறையையும் அறிய முடிகின்றது.

**பொருள்வயிற் பிரிவு**

உலகில் இன்பமாக வாழ்வதற்குப் பொருள் மிகவும் அவசியமாகும். அதனால்தான் நம் முன்னோர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்று வகுத்து வைத்துள்ளனர்.

பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கை இன்பமாக அமையாது என்பதை,

**"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு"** **(குறள். 247)**

என்று வள்ளுவர் கூறுகின்றார்.

பொருள் காரணமாகத் தலைவனின் பிரிதல் சங்க இலக்கியங்களில் பெரிதும் பேசப்படுகின்றது. தொல்காப்பியர் பொருள்வயிற் பிரிதல் தலைமகனுக்கு உரியது என்கிறார். மேலும் உயர்ந்தோர் பொருள்வயிற் பிரிதல் அறத்தோடு அமையும் என்று உரைக்கின்றார். இதனை,

**"பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே**
**உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான"** **(தொல்.பொருள்- 979)**

என்ற நூற்பாவழி அறிய முடிகின்றது.

காதல் வாழ்க்கை உடையவர்களுக்குக் கடமையும் உண்டு. அக வாழ்வில் தலைவன், தலைவி இருவரும் எப்பொழுதும் சேர்ந்திருத்தலாகக் கூறப்படுதல் இல்லை. அத்தகைய கடமையுணர்வின் பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து பொருளினை ஈட்ட முனைகின்றான். சுற்றத்தார்க்கு நேர்கின்ற கேட்டினைப் போக்கவும், அவர்களைத் தாங்குதல் போன்றவற்றிற்கெல்லாம் கருவி பொருள் ஆகும். அத்தகைய பொருள் தேரும் செயலைச் செய்து முடிக்கின்றான் தலைவன். இதனை,

**"கேள்கேடு ஊன்றவும் கிளைஞர் ஆரவும்**
**கேள்அல் மகளிர் கெழீஇயினர் ஒழுகவும்**
**ஆள்வினைக்கு எதிரிய ஊக்கமொரு புகழ் சிறந்து"** **(அகம். 93)**

என்ற பாடலடிகள் வழி தலைவனது பொருளீட்டும் விருப்பத்தினையும்,

**"செயல் அருஞ் செய்வினை முற்றினம் ஆயின்"** **(அகம். 93)**

என்ற அடிகளின் வழி அத்தகைய பொருளீட்டும் செயலைச் செய்து முடித்தமையையும் அறிய முடிகின்றது.

**செலவழுங்கல்**

சங்க இலக்கியத்தில் களவு முடிந்த நிலையில் தொடங்குவது கற்பு வாழ்க்கையாகும். இக்கற்பில் நிகழும் பிரிவு வகைகள் தலைமக்களுக்குரிய மனப்போராட்டத்தைப் பிரதிபலிப்பவையாகும். இப்பிரிவு வகைகள் பொருள்வயிற் பிரிவை அடியொற்றி வருபவை செலவழுங்கல் என்னும் துறையாகும். செலவு என்பது தலைவன் பொருள் தேடும் நோக்குடன் தலைவியைப் பிரிந்து செல்வதாகும். அழுங்கல் என்பது ஏதோ ஒரு காரணம் கருதித் தங்குகின்ற சூழலைக் குறிக்கும். அத்தகைய செலவழுங்கல் என்பது வினைவேற் செல்லாமையன்று, மாறாகத் தலைவிக்குத் தெரிவித்து அவளது விருப்பத்துடன் செலவினை மேற்கொள்ளுதலே ஆகும். பிரித்து செல்லுதற்கிடையே சில நாள் அதைத் தவிர்த்து இருத்தல், செல்லாது இவ்விலேயே இருப்பதற்கன்று. வற்புறுத்திப் பிரிதல் என்ற "வன்புறை" குறித்த தவிர்ச்சி ஆகும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இதனை,

**"செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே**
**வன்புறை குறித்த தவிர்ச்சி ஆகும்"** **(தொல்.பொருள்.1131)**

என்னும் நூற்பாவின் வழி அறியலாம்.

செலவழுங்கல் என்பது இருவகைப்படும்.

அவை,
1. **இல்லத்து அழுங்கல்**
2. **இடைச்சரத்து அழுங்கல்**

என்பதாகும்.

தலைவன் பொருள் தேடக் கருதிய நிலையில் செலவினைத் தலைவியை ஆற்றுப்படுத்துதல் காரணமாகத் தன்னுடைய இல்லில் இருந்து அழுங்கல் இல்லத்தழுங்கலாகும். தலைவனின் நெஞ்சமானது தலைவனை வினைமேற் செல்ல அழைக்கின்றது. ஆனால், தலைவியின் நலனில் அக்கறை கொண்ட தலைவன் சுரம் கடந்து அரிதாக குறிப்பிடத்தக்க சிறந்த பொருளை எளிதாகப் பெற்றாலும் தலைவியைப் பிரிந்து வாரேன் என்கிறான். இதனை,

> **"அத்த நீள் இடைப் போகி, நன்றும்**
> **அரிதுசெய் விழுப்பொருள் எளிதினின் பெறினும்**
> **வாரேன்……"** **(அகம்.149)**

என்ற பாடலடிகள் வழி ஒரு பக்கம் பொருளீட்டும் ஆர்வமும், மறுபக்கம் தலைவியின் நலன் குறித்த இன்பமும் வருத்த நெஞ்சைக் காரணமாக்கிப் பொருட்செலவைத் தவிர்த்து இல்லத்தில் தங்கினான் என்பதை அறிய முடிகின்றது.

பொருளீட்டும் பொருட்டுச் சென்றபின் அவனது நெஞ்சமானது வருத்தமுற்று செல்ல மறுக்கின்றது. இதனை

> **"எம்மோடு இறத்தலும் செல்லாய் பின்நின்று**
> **ஒழியர் சூழ்ந்தனை ஆயின் தவிராது**
> **செல் இனி சிறக்க நின் உள்ளம்!"** **(அகம்.19)**

என்ற பாடலடிகள் இடைச்சுரத்து வருத்தமுற்ற நெஞ்சைத் தலைவன் ஆற்றுப்படுத்துவதாக அமைகின்றது.

**ஆற்றுவித்தலும் ஆற்றியிருத்தலும்**
அகப்பாடல்களில் பெரும்பான்மையான பாடல்கள் பிரிவு குறித்தும் பிரிவு நிமித்தம் குறித்தும் அமைந்துள்ளன. அக மாந்தர்களின் மன உணர்வுப் போராட்டங்களுக்குத் தீர்வு காண்கின்ற செயல்களில் எல்லாம் தோழியே முன்னிறுத்தப்படுகின்றாள். காதல் மாந்தரில் தலைவியர் ஆற்றுவிக்கப்படுவோராயும், தோழியர் அவரை ஆற்றுவிப்போராவும் அமைவர். தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவன் இளவேனிற்காலத்தும், கார்காலத்தில் மீண்டும் வருவதாகக் கூறி செல்வதுண்டு என்பது அகநானூற்றுப் பாடல்களில் குறிப்பிடப்படுகின்றது. பிரிவால் துன்பம் அடையும் தலைவிக்கு, தோழி சில காரணங்களைக் கூறி ஆற்றுவிக்கின்றாள். இதனை, பின்வருமாறு காணலாம். அவை,

1. **தலைவன் சென்ற இடத்தில் மறந்தும் துறந்தும் தங்கான் எனல்**
2. **பெரும் நிதியம் பெறினும் தங்கான்**
3. **அமிழ்தே கிடைத்தாலும் வேண்டாத தலைவன்**
4. **பருவம் காட்டி தலைவன் வருவர் எனக் கூறுவது**

போன்றவை ஆற்றுவித்தல் காரணங்களாக அமைகின்றன.

தலைவி, தலைவனைப் பிரித்து ஆற்றாமை மிக்கவளாய் காணப்படுகின்றாள். அவளை ஆற்றுவிக்கும் தோழி இவளைப் பிரிதல் இயலாது என முதலில் பிரிவைத் தவிர்த்த தலைவன், மறந்தும் துறந்தும் வேற்று நாட்டில் தங்க மாட்டான் என்று கூறுவதை,

> **"உள்ளல் வேண்டும் ஒழித்தபின் என**
> **நள்ளென் கங்குல் நடுங்குதுணை ஆயவர்**
> **நின் மறைந்து அறைதல் யாவது?"** **(அகம். 129)**

என்ற பாடலடிகளின் வழி அறியலாம்.

**பிரிவும், தலைவியின் உடற்கூறு மாற்றமும்**
ஒருவரைக் காணும் போது முதலில் அவருடைய தோற்றமே கண்களுக்குப் புலனாகின்றது. அந்த தோற்றத்தைக் கொண்டே முதலில் அவர்தம் பண்புகளை அறிந்து கொள்கிறோம். எனவே, மானிடப் படைப்பில் தோற்றம் மிகச்சிறந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது.

தலைவன் தலைவியோடு இணைந்து வாழும் காலத்தில் அழகிய மலர்களைச் சூடி, கண்களில் மை தீட்டி அழகு வாய்ந்தவளாகக் காணப்படுகின்றாள். ஆனால், தலைவன் பிரிந்தால் அழகிழந்து புனையா ஓவியமாகக் காட்சியளிக்கின்றாள். தலைவனைப் பிரிந்த தலைவியின் கண்களும், தோள்களும் அதிக அளவில் வருத்தம் கொள்வதாகப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. தலைவியின்

பிரிவால் தலைவி அடைந்த உடற்கூறு மாற்றங்களை அகநானூற்றுப் பாடல்கள் மூன்று வகையாக வெளிப்படுத்துகின்றன. அவை,

**1. தலைவனைப் பிரிந்த தலைவி உணவு கொள்ள இயலாமலும், உறக்கம் கொள்ள இயலாமலும் துன்புறுவதால் அவளின் கண்களும், தோள்களும் அழ கிழந்தமையைச் சுட்டுகின்றது.**

**2. தலைவனின் பிரிவால் தலைவிக்குப் பசலை ஏற்பட்டு உடல்நிறம் மாறுபடுவதையும் சுட்டுகின்றது.**

**3. தலைவனைப் பிரிந்த தலைவியை இயற்கை நிகழ்வுகளும் வருத்துவதாக இயம்புகின்றது.**

தலைவனின் பிரிவினைத் தாள முடியாத தலைவியன் மேனி மெலிவது மட்டுமில்லாமல் அவளது ஒவ்வொரு உறுப்பும் பொலிவிழந்து காணப்படுகின்றது. இன்பத்தால் மகிழ்ச்சி அடைந்து வீங்கிய தோள்கள், தலைவன் பிரிந்து சென்ற நிலையை நினைத்துத் தளர்ந்து மெலிந்து பிரிவுத் துன்பத்தை வெளிப்படுத்துவனவாக மாறின என்பதை,

**"நம் பிரிவு அறியா நலனொடு சிறந்த**
**நல் தோள் நெகிழ வருந்தினள் கொல்வோ!"**
**(அகம்.41)**

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன.

தலைவனின் பொருளீட்டும் வினை காரணமாகத் தலைவியை விட்டுப் பிரிந்து சென்றான். வேய்த்தோள், பணைத்தோள், ஏர்த்தோள் என்றெல்லாம் வருணிக்கப்படும் தலைவியின் தோள்கள் அழகிழந்து காணப்படுகின்றன. இதனை,

**"வீங்கு இறைப் பணைத்தோள் நெகிழ சேய் நாட்டு**
**அருஞ்செயற் பொருட் பிணி முன்னி, நம்**
**பிரிந்து சேண் உறைநர் சென்ற ஆறே" (அகம்.59)**

என்ற பாடலடிகள் வழி அறியலாம்.

**முடிவுரை**

அகநானூற்றில் வினைவயிற்பிரிவு என்னும் தலைப்பில் எழுதப் பெற்ற இவ்வாய்வு கட்டுரையின் மூலம் பிரிவுகள் பற்றியும், தலைவன் மேற்கொண்ட வினை மற்றும் தலைவியின் நிலையை அறிய முடிகின்றது. தலைவனது பிரிவால் தலைவியின் மனஉணர்வினை அறிய முடிகின்றது.

தலைவனின் பிரிவால் தலைவிக்கு உண்டாகும் பிரிவுத் துன்பங்களைத் தோழி அறிகின்றவளாதலின் தலைவி படும் துன்பங்களை எடுத்துக் கூறித் தலைவனின் செலவினைத் தடுக்க முனையும் செய்திகளையும் அறிய முடிகின்றது.

தலைவனின் உயர்ந்த பண்புகளையும், கடமைகளையும் மட்டுமே கூறி தோழி ஆற்றுவிக்கும் செய்திகளையும், தலைவன் மீது நம்பிக்கை கொண்டு தலைவி தாமே ஆற்றியிருக்கும் செய்திகளையும் அறிய முடிகின்றது.

**துணை நூற்பட்டியல்**

1. சிதம்பரவனார்.வ.உ., - திருக்குறள் தெளிவுரை,
பாரி நிலையம், பிராட்வே, சென்னை – 600108
2. பேராசிரியர் (உ.ஆ)., - தொல்காப்பிய பொருளதிகாரம்,
கழக வெளியீடு, சென்னை.
3. மாணிக்கனார். வ.சுப., - தமிழ்க்காதல்,
ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், தியாகராய நகர், சென்னை – 600017.
4. ராமசுப்பிரமணியன்.வ.த., - அகநானூறு மூலமும் தெளிவுரையும்,
திருமகள் நிலையம், சென்னை - 600017